**கமு/கமு/அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை - சாய்ந்தமருது**

# முதலாந் தவணைக் கணிப்பீடு - 2024

| தரம் 5 | தமிழ்மொழி | | | | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| | வகுப்பு | | நேரம்: | 1.30 மணி | |
| சுட்டெண்/பெயர்: | | | | | |

**01. பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக**

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறு விறு எனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காக சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

1. விடியற்காலையை எதிர்பார்த்திருந்தோர் யாவர்?

   ………………………………………………………………………………………………

2. பந்தியில் வந்துள்ள அடுக்குமொழியினை எழுதுக?

   ………………………………………………………………………………………………

3. “கழனி” என்பதன் ஒத்த சொல்லை எழுதுக?

   ………………………………………………………………………………………………

4. பந்தியில் வந்துள்ள இரட்டைக் கிளவிச் சொல்லை எழுதுக?

   ………………………………………………………………………………………………

5. உயர்திணை, பன்மை, நிகழ்கால வினைச் சொல்லை எழுதுக?

   ………………………………………………………………………………………………

6. வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்கச் செல்பவர்கள் யாவர்?

   ………………………………………………………………………………………………

( 6 x 2 = 12 புள்ளிகள்)

**02. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.**

1. மாற்றான் ……………………………………………………
2. செய்தித்தாள் ……………………………………………………
3. ஈகை ……………………………………………………
4. ஏர் ……………………………………………………
5. நாடு ……………………………………………………

( 1 x 5 = 05 புள்ளிகள்)

**03. பின்வரும் சொற்களுக்குரிய ஆண்பால் பெண்பால் சொற்களை எழுதுக?**

1. நிபுணன் ..................................
2. .......................... நங்கை
3. குணவான் ..................................
4. மூத்தவன் ..................................
5. பேரன் ..................................

( 1 x 5 = 05 புள்ளிகள்)

**04. பின்வரும் எதிர்க்கருத்துச் சொற்களை இணைக்குக.**

| | | |
|---|---|---|
| 1. | உண்டு | பழைமை |
| 2. | பெருமை | வெந்நீர் |
| 3. | புதுமை | இல்லை |
| 4. | ஐக்கியம் | சிறுமை |
| 5. | தண்ணீர் | பிளவு |

( 1 x 5 = 05 புள்ளிகள்)

**05. பின்வரும் வாக்கியங்களில் ஒருமை வாக்கியங்களைப் பன்மையாகவும் பன்மை வாக்கியங்களை ஒருமையாகவும் மாற்றி எழுதுக?**

1. கழுகு வானில் வட்டமிட்டது. ...........................................................................
2. பருந்துகள் உயரப் பறந்தன. ...........................................................................
3. பேருந்து வேகமாகச் சென்றது. ...........................................................................
4. சிட்டுக்குருவிகள் பறந்தன. ...........................................................................
5. அவள் சஞ்சிகை வாங்கினாள் ...........................................................................

( 5 x 2 = 10 புள்ளிகள்)

**06. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

1. சிறுவர்கள் ..................................................... (ஒழிந்து / ஒளிந்து) விளையாடினர்.
2. அதிபர் பரிசளிப்பு விழாவில் ...............................................(உறை / உரை) யாற்றினார்.
3. அந்த மரத்தில் ஒரு சிறிய ......................................... (கோரை / கோறை) உள்ளது.
4. நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி வாழ வேண்டுமானால் ..........................( ஊன்/ ஊண்) உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
5. நல்ல கருத்துக்களை ................................ (அரிய / அறிய) வேண்டும்.

( 5 x 2 = 10 புள்ளிகள்)

**07. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பணனிலைத் தொடர்பு சரியாயின் " ✓" எனவும் பிழையாயின் " x" எனவும் எதிரேயுள்ள அடைகப்புக்குறிக்குள் இடுக.**

1. பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையைத் தொடங்கியது. ( )
2. வில்வராய முதலியார் கவிகள் பாடுவாள் ( )
3. குயவர்கள் குதிரைகளை உருவாக்கினார்கள் ( )
4. மான் கூட்டம் சிதறி ஓடின. ( )
5. நண்பர்கள் உயர்திணை பன்மைப் பெயராகும் ( )

( 5 x 2 = 10 புள்ளிகள்)

**08. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.**

**1. ஆடு குழை தின்னும்.**

எழுவாய் : ……………………………………………………………………………..

பயனிலை : ………………………………………………………………………………

செயப்படுபொருள் : ……………………………………………………………………

**2. நான் குருவியைப் பார்த்தேன்.**

எழுவாய் : …………………………………………………………………………….

பயனிலை : ……………………………………………………………………………..

செயப்படுபொருள் : ……………………………………………………………………

(6 x 2 = 12 புள்ளிகள்)

**09. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.**

1. நச்சத்திரம் / நட்சத்திரம்
2. பரீச்சை / பரீட்சை
3. தொழிலாளி / தொழிலாழி
4. முயற்ச்சி / முயற்சி
5. ஆராய்ச்சி / ஆராட்சி

( 1 x 5 = 05 புள்ளிகள்)

**10. அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களில் இருந்து எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிந்து கோடிடுவோம்.**

1. இயற்கைப் பானமான ( இளனி / இளநீர்) அருந்துதல் உடலுக்கு நன்மையைத் தரும்.
2. தனா (சிகப்பு / சிவப்பு ) நிறப் பூக்களைப் பறித்தாள்.
3. அம்மா கறிக்குச் சுவையூட்ட ( கறிவேப்பிலை / கருவேப்பிலை)யைப் பயன்படுத்தினாள்.
4. ஜீனா (கத்தரிக்கோல் / கத்திரிக்கோல்) கொண்டு கடதாசியை வெட்டினாள்.
5. நானும் தம்பியும் மாலை வேளையில் (தேநீர் / தேனீர்) அருந்துவோம்.

( 5 x 2 = 10 புள்ளிகள்)

**11. கீறிட்ட இடத்தில் பொருத்தமான இறந்தகால வினைச் சொற்களை வைத்து வாக்கியத்தை நிறைவு செய்க.**

1. ஜானகி பாட்டுப் பா ……………………………………………………………………….
2. மல்லிகைப்பூ மணம் வீ ……………………………………………………………………
3. பெண்கள் நீரைப் ப……………………………………………………………………….
4. தாய் குழந்தைக்கு உணவு கொ……………………………………………………………
5. பறவைகள் வானத்தில் ப…………………………………………………………………

( 5 x 2 = 10 புள்ளிகள்)

**12. காட்சிப் படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் இருத்தல் வேண்டும்)



1………………………………………………………………………………………………..

2……………………………………………………………………………………………….

3…………………………………………………………………………………………………

(3 x 2 = 06 புள்ளிகள்)